பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
O/L ஆண்டு 10,9
விஞ்ஞானம்
ஜே. ஆர். சூரி

# உதயன்

விலை ரூபா 5-00

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
O/L ஆண்டு 10,9
கணிதம்
ஜெகன்

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 06 வெள்ளிக்கிழமை (19.03.1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 112

# கடற்படை பலத்தை அதிகரிக்க புதிதாக நிரந்தர ரிசேர்வ் பிரிவு

## நாடாளுமன்றுக்கு ஒழுங்கு விதிகள்

கொழும்பு, மார்ச் 19

சுடற்படையின் பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஒன்றாக, புதிதாக நிரந்தர ரிசேர்வ் பிரிவு ஒன்று உருவாக்கப்பட உள்ளது இதற்கான ஒழுங்கு விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

வடக்கு - கிழக்கு போரை தீவிரப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் முப்படைகளின் ஆளணிகளையும், ஆயுத தளபாடங்களையும் அதிகரித்து வருவது தெரிந்ததே.

நவீன ஆயுத தளபாடங்களைப் பெரும் பணச் செலவில் வாங்கிக் குவிக்கும் அரசு, முப்படைகளின் ஆட்பலத்தையும் பெருக்கி வருகிறது. இராணுவத்திற்கு மாதாந்தம் புதிதாகச் சிப்பாய்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

இராணுவத்துக்கு அடுத்து கடற்படை ஆளணியை அதிகரிக்க அரசு இப்போது அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சக்திமிக்கப் படையாக மாறி வருவதால் அதனை ஈடுசெய்யக்கூடிய விதத்தில் கடற்படையைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டு வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன.

வடக்கு - கிழக்கு போரை வெல்லும் முயற்சியில் படைகளில் ஆளணி அதிகரிக்கப்படுகிறது. அந்த வகையிலேயே கடற்படையிலும் புதிதாக நிரந்தர கடற்படை ரிசேர்வ் பிரிவு ஆரம்பிக்கப்பட உள்ளது.

கடற்படையில் தற்போது உள்ள நிரந்தரப்படைகள், தொண்டர் படைகள் மற்றும் ரிசேர்வ் தொண்டர் படைகள் ஆகியவற்றுடன் மேலதிகமாக நிரந்தர கடற்படை ரிசேர்வ் பிரிவும் செயற்படும். புதிய பிரிவு தொடர்பான ஒழுங்கு விதிகள் ஜனாதிபதியால் பெப்ரவரி முதலாம் திகதி 'நிரந்தர கடற்படை ரிசேர்வ் ஒழுங்கு

( 3ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் படையினர் அட்டகாசம்

### மீனவர்கள் தாக்கப்பட்டனர்

வடமராட்சிக் கடல் பிரதேசத்தில் ஸ்ரீலங்காப் படையினர் அடிக்கடி ரோந்து புரிந்கின்றனர் அவர்கள் மீனவர்களைக் கண்டால் அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

கடந்த சில தினங்களாக படையினரின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

கடந்த புதன்கிழமை காலை பொலிகண்டிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இருவரை படையினர் சுற்றி வளைத்து பிடித்து கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

அவர்களால் பிடிக்கப்பட்டிருந்த மீன்களும் கடலில் வீசப்பட்டன. மீன்பிடி உபகரணங்களும் பறித்தெறியப்பட்டன.

பின்னர் சம்பந்தப்பட்ட இருவரையும் படையினர் எச்சரித்து கரையை சென்றடையுமாறு கூறி, துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த படி சென்றனர்.

பலாலியைச் சேர்ந்த இறீஸ்த வோகேஸ், ஆதி கோவிலடியைச் சேர்ந்த நாராயணசாமி அருந்தவராசா ஆகிய இருவருமே தாக்குதலுக்கு இலக்கானவர்கள் ஆவர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-155)

## இம்முறை வந்த கடிதங்கள் கிழிக்கப்படாத நிலையில்

யாழ்ப்பாணம், மார்ச்.19

இம்முறை வடக்கே எடுத்து வரப்பட்டுள்ள வெளியூர் தபால்கள் பெரும்பாலும் கிழிக்கப்படாத நிலையில் இருந்ததாக யாழ் பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'வாதுவ' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 760 தபால் பொதிகளையும் தரம் பிரித்து விநியோகிக்கும் வேலைகள் நேற்று முதல் ஆரம்பமாகின

கடந்த பெப்ரவரி நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் முத்திரையிடப்பட்ட தபால்கள் அவற்றில் அடங்கியிருந்தன.

இம்முறை பெருமளவு வெளிநாட்டு உள்நாட்டுப் பதிவுத் தபால்கள் எடுத்து வரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

400க்கும் மேற்பட்ட பொதிகளில் வான் கடிதங்கள் வந்துள்ளன. (ஒ-5)

## ஏழு தமிழ்க் கட்சிகளும் 20ஆம் திகதி கூடுகின்றன

கொழும்பு, மார்ச் 19

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு அண்மையில் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கைக்கு பதில் அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக கொழும்பில் உள்ள ஏழு தமிழ்க் கட்சிகளும் இம்மாதம் 20ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த ஏழு கட்சிகளும் கொழும்பில் கூடி பதில் அறிக்கையை தயாரிப்பது பற்றி பரிசீலனை செய்தன.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. மாவை சேனாதிராஜா, தனது கட்சியின் தலைவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்றும் அவர்கள் நாடு திரும்பும் வரை தன்னால் முடிவு ஏதும் எடுக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்தே இம்மாதம் 20 ஆம் திகதி மீண்டும் கூடி, பதில் அறிக்கை தயாரிக்கும் விஷயத்தைத் தொடர்ந்து பரிசீலனை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

# குடாநாட்டுக்கான போக்குவரத்து: ஐ. நா. ஏற்பாட்டுக்கு அரசு இணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

★ யாழ்ப்பாணத்திற்கு ஒரு போக்குவரத்து வழியை திறந்துவிடும் அகதிகளுக்கான ஐ நா தூதரகத்தின் நடவடிக்கையை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

★ யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களை, ஐ நா. வின் கண்காணிப்புடன், அதன் தலைமையில் களைவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

யாழ்ப்பாணத்திற்கு உணவும் பொருள்களையும், நோயாளர்களையும் ஏற்றிச் செல்வதற்கு நாளாந்தம் சில மணித்தியாலங்கள் கடலேரியைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் நேற்று நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து வசதி குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த திரு. வீரக்கோன் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பிரயாண வசதிகள் மீதான கட்டுப்பாடுகளை ஓரளவுக்குக் குறைப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடுவதில் ஆர்வம் காட்டித் துணைபுரிந்து வருவது அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தினரே. தூ. தரக அதிகாரிகள் அதற்கான ஒழுங்குகளைச் செய்வதில் இப்போது ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அதிகாரிகள் நேற்றுப் பூநகரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 19

பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை திறப்பது குறித்து ஆராய்வதற்காக அகதிகளுக்கான ஐ நா. தூதரக அதிகாரிகள் நேற்றுக் காலை பூநகரிக்கு விஜயம் செய்தனர்.

அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் கொழும்பு பதில் வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட இலங்கைப் பிரதிநிதி திரு. றொபார்ட் இங்கிலான்ட், திட்ட அதிகாரி திரு. றொட்சிலிப் ஆகியோரே நேற்று பூநகரிக்கு வந்த அதிகாரிகள் ஆவர்.

நேற்று முன்தினம் மடு அகதி முகாமில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்துக்கு வந்து சேர்ந்த அந்த அதிகாரிகள், வாகனம் மூலமாக விடத்தல் தீவு-மன்னார் பாதையூடாக பூநகரியை நேற்றுக் காலை வந்து சேர்ந்தனர்.

அங்கிருந்து ஐ. நா கொடி பறக்க வாகனத்தில் சங்குப்பிட்டி நோக்கிச் சென்றனர்.

வீதிகள் சேதமுற்றிருந்ததால் இடை வழியில் வாகனத்தை நிறுத்திவிட்டு, கால் நடையாக பூநகரி இராணுவ முகாமை அடைந்தனர்.

அங்குள்ள வீதிகளின் நிலை

( 3ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இந்திய அரசிடம் நீதிகேட்டு உண்ணாவிரதப் போர் இருந்து, அது கிடைக்காததால் தமிழர் உரிமைகளுக்காகத் தன்னுயிர் ஈந்த மாதர் திலகம் அன்னை பூபதியின் நினைவு நிகழ்ச்சிகள் இன்று ஆரம்பமாகின்றன.

தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை எழுச்சி மிகு நினைவு நிகழ்ச்சிகளை நடத்த பல்வேறு அமைப்புகளும் ஏற்பாடுகள் செய்துள்ளன. (அ-111)

## மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த — தமிழீழ மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் — நாளை சனிக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 11 மணி தொடக்கம் 12மணி வரையும் செலுத்தலாம்.

தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் —

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் நாளை பிற்பகல் 2மணி தொடக்கம் 3 மணிவரையும் —

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3-30 மணி தொடக்கம் 4-30 மணி வரையும்—

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை மீட்பு நிதியைச் செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. (ஒ)

## கடலிலிருந்து பீரங்கித்தாக்கு

வல்வெட்டித்துறை, மார்ச் 19

வடமராட்சிக் கடற்பரப்பில் ரோந்தில் ஈடுபட்டுவரும் கடற்படையினர் நேற்றுக் காலை 6 மணியளவில் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

கரையோரப் பகுதிகளிலும், மண்டான் பகுதியிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-155)

## பூநகரியில் ஷெல் வீச்சு

தென்மராட்சி, மார்ச் 19

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணி தொடக்கம் நேற்று அதிகாலை வரை பூநகரிப் பகுதி முகாமிலிருந்து கடற்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் வீச்சும் நடத்தப்பட்டன. (ஒ-117)

## ஸ்ரீலங்கா கடற்படை தளபதி பூநகரி தளத்துக்கு விஜயம்

கொழும்பு, மார்ச்.19

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகரா கடந்த வாரம் பூநகரிப்பகுதியில் உள்ள கடற்படைத் தளத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ். ஏரியிலான கடற்படையினரின் நடவடிக்கைகள் ",நாகதேவன் துறை" எனப்படும் பூநகரி ஞானிமடம் தளத்தில் இருந்துதான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தளபதி மொஹான் சமரசேகரா பின்னர் திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கு விஜயம் செய்து விட்டு, கடந்த சனிக்கிழமை கொழும்பு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கொழும்பில் நேற்று வாய் கட்டி போராட்டம்

கொழும்பு, மார்ச் 19

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்டித்து கொழும்பில் நேற்று சத்தியாக் கிரகப் போராட்டம் நடத்தப்பட்டது.

எதிரணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்கா உட்பட பலர் கடந்த இந்த போராட்டத்தில் எதிரணிக் கட்சி உறுப்பினர்கள், மதகுருமார், செய்தியாளர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கறுப்புத் துணியால் வாயைக் கட்டிய வண்ணம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கொழும்பு மாநகர சபைக்குச் சமீபமாக உள்ள விட்டன் ஒழுக்கத்தில் இப் போராட்டம் நடத்தப்பட்டது. (இ-3 6)

## தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 19

சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

போரூட் அமைப்பைச் சேர்ந்த வதிவிடப் பிரதிநிதி திரு. போல் ஹென்றி கெயிலன், திட்டப் பணிப்பாளர் திரு. எம். எல். மரிக்கார், ரெட்பாணா அமைப்பைச் சேர்ந்த இலங்கை உதவி வதிவிடப் பிரதிநிதி திரு. றோயர்ஸ்கா சிரேஷ்ட நிகழ்ச்சி இணைப்பாளர் திரு. ஏ ஜி பாலச்சந்திரன் ஆகியோரே இவர்கள் ஆவர்.

இவர்கள் பலாலிவந்து அங்கிருந்து நேற்றுக் காலை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குமண வந்து உடன் திரும்பியது

நெல்லியடி. மார்ச் 19

கொழும்பில் சிகிச்சை பெற்ற 97 நோயாளர்களை ஏற்றிக்கொண்டு திருமலையிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறையை வந்தடைந்தது

சிகிச்சைக்காக இங்கிருந்து புறப்பட்ட 60 நோயாளர்களையும், தபால் பொதிகளையும் ஏற்றிக்கொண்டு அந்தக் கப்பல் நேற்று மாலையே மீண்டும் திருமலை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. (ஒ-109)

## வவுனியாவில் 'புக்காரா' குண்டுவீச்சு

வவுனியா — மாவட்டம் ஈச்சங்குளம் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் 'புக்காரா' விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

அப்பகுதியில் இரு குண்டுகள் வீசப்பட்டன சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

## மட்டு. வைத்தியசாலையில் சிவில் உடையில் ராணுவம்

### கண்காணிப்பில் ஈடுபடுகிறதாம்

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிவில் உடையில இராணுவத்தினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இருந்து மருந்துப் பொருள்கள் களவாடப்படுவது குறித்துத் தமக்குப் புகார் கிடைத்துள்ளது என்றும் —

அது பற்றிக் கண்காணிக்கவே அங்கு இராணுவத்தினர் சிவில் உடையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் யொஹான் குணவர்த்தன அறிவித்திருக்கிறார். (த-5)

## தமிழகத்தின் கரையோரப் பாதுகாப்பு பலப்படுத்த நடவடிக்கை

சென்னை மார்ச் 19

தமிழகத்தின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பம்பாய் மற்றும் கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில மேலதிக பொலீஸ் தலைமை இயக்குநர் வால்டர் தேவாரம் தஞ்சையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### டயறிகள் விற்பனைக்கு

சகலவிதமான எல்லா அளவுகளிலும் தரமான டயறிகள் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விஷேட கழிவுகள் வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4707)

### விற்பனையாகின்றன

எம்மிடம் தெய்விக நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் ஆகியன விற்பனையாகின்றன. சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரிய கடை, யாழ்ப்பாணம், சோதிட பிரகாச இயந்திரசாலை, கொக்குவில். (6049)

ஆண்டு 9, 10, 11 மாணவர்களுக்கான ஆங்கிலக் கட்டுரை நூல், Model Essays. ஆண்டு 3, 4, 5 மாணவர்களுக்கான Childrens Essays விற்பனையாகின்றன. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (24872)

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்யும் தரத்தில் சிறந்த காவேரி சியாக்காய்ப் பவுடர் விற்பனையாகிறது. தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன்சன்ஸ் இல: 15, ஆடியபாதம் வீதி, நல்லூர். (24881)

### மணப்பெண் தேவை

இந்து, வயது 33, நட்சத்திரம் அத்தம், 1இல் செவ்வாய் வெளிநாட்டில் தொழில் புரிபவருக்கு மணமகள் தேவை. குறிப்புடன் விண்ணப்பிக்கவும்: இல. 508, மே/பா உதயன், யாழ்ப்பாணம் [24880]

### இலவச திருமண சேவை

36 வயது, கேட்டை, செவ்வாய் 1, கனடா மணமகனுக்கு இலங்கையில் அல்லது Sponser செய்து அழைக்க மணப்பெண் தேவை. 34 வயது, விசாகம், சகோதரியுடன் மாற்றுச் சம்பந்தமும் ஏற்கப்படும். விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (24860)

### இலவச சேவை

மெய்கண்டதேவர் ஆதீனம் வார நாள் முற்பகலில் செயலாற்றும் முகவரி: 5, கலைப் புலவர் வீதி, யாழ்ப்பாணம்; பிற்பகலில்: 516, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சேவைகள் இலவசம். (24874)

### திருத்தவேலைகள்

மணிக்கூடுகள், சுவர்க்கடிகாரங்கள், எலக்ரோனிக் கடிகாரங்கள் எதுவானாலும் உங்கள் மனத்திருப்திக்கு ஏற்ற வகையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். பழைய மணிக்கூடுகள் வாங்கவும், விற்கவும் தொடர்பு: தியாகர் வாச்வேக்ஸ், 406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக] (24870)

### வேப்பம் பழுத்தல் இலை

துப்புரவான வேப்பம் பழுத்தல் இலை வாங்கப்படுகிறது. விலை கிலோ ரூபா 2/-. "மில்க்வைற்" (சி-4693)

### O/L வினா விடை

உயர்கல்வி சேவை நிலையத்தின் கடந்த கால O/L பரீட்சை வினா - விடைகள் விற்பனையாகின்றன. 5ஆம் புலமைப்பரிசில் பரீட்சை வினா - விடையும் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு 20% கழிவு வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (சி-4715)

### வெளிவந்துவிட்டன!

ஆண்டு 1 மாணவர்களுக்கான தமிழ் செயல் நூல் புதிய பாடத் திட்டத்திற்கமைய ஆக்கப்பெற்றது; ஆண்டு 8 மாணவர்களுக்கான சிறுவர் கணிதம் ஆக்கம்: த. ஆனந்தன், ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (24873)

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு!

இம்மாவட்டத்தில் சனசமூக நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றால் நடாத்தப்படும் அனைத்துப் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களையும் 21 - 03 - 93 ஆம் திகதி ஞாயிறு காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93-03-17 (சி/4700)

யாழ். பரியோவான் கல்லூரி
லியோ கழகம் நடத்தும்
ரசிகர்களின் அபிமான

## பாடசாலை கிரிக்கெட் நட்சத்திரம் தெரிவுப் போட்டி 1993

இரண்டாம் சுற்றில் (17 - 03 - 93வரை) முன்னணியில் உள்ள வீரர்களின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| ★ எம். காண்டீபன் (S. J. C.) | (யா. ப. க.) | — 339 |
| ★ எஸ். மணிவதனன் | (யா. ம. க.) | — 299 |
| ★ ரி. கிருபாகரன் | (கொ. இ. க.) | — 276 |
| ★ கே. ரஜீவன் | (கொ. இ. க.) | — 231 |
| ★ எஸ். தனிகேஸ்வரன் | (கொ. இ. க.) | — 173 |
| ★ எஸ். வரதன் | (யா. இ. க.) | — 169 |

மூன்றாம் சுற்று முடிவுகள் 26-03 93 இல் வெளியிடப்படும்.

பரியோவான் கல்லூரி லியோகழகம்.

விளம்பர அன்பளிப்பு:-
V. S. B. GROUP,
260 A, STANLEY ROAD,
JAFFNA.
(சி-4556)

உ
ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை
விராட் விஸ்வப் பிரம்மணே நம:

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் பங்குனி மாதம் 7 ஆம் நாள் 20 03 1993 சனிக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரையுள்ள அவிட்ட நட்ஷேத்திரமும், சித்தயோகமும் கூடிய ★ சுபமுகூர்த்தத்தில் ★

காலஞ்சென்ற
திரு திருமதி செல்வரெத்தினம்
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
ரவீந்திரன் (ரொபி)
அவர்களுக்கும்

திரு திருமதி சுந்தரலிங்கம்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
பத்மாதேவி (பத்மா)
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்களும், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் ★ அன்புடன் அழைக்கின்றோம் ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

மணமகன், சகோதரர்களும்,
509 காங்கேசன்துறை வீதி (ட்டாசெரு,
யாழ்ப்பாணம்

திரு திருமதி சுந்தரலிங்கம் தம்பதிகள்,
74/1, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

வரவேற்பு:- அன்று பிற்பகல் 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்
தனிப்பட்ட அழைப்பு இல்லை
24876

## ஓராண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்: 10 — 04 — 1988
மண்ணின் மடியில்: 19 — 03 — 1992

### இராசகுலேந்திரன் கஜானன்

நாலாண்டு தவமிருந்து நாம் பெற்ற கஜானா
மாநிலத்தில் நீ வாழ விதி இன்றிப் போனதுவோ
பாசமிகு செல்வமே பறந்து சென்று விட்டாய்
பாரினில் நாளும் பாவியராய் பரிதவிக்கின்றோம்
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறிடுமா நம் துயரம்
மீண்டும் எம்மடியில் வந்து எம் துயர் தீராயோ!

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அம்மம்மா,

சிறுப்பிட்டி, மத்தி,
நீர்வேலி.
(சி/4695)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 03 — 11 — 1930
உதிர்வு: 15 — 03 — 1988

### திருமதி தயாபரசுந்தரி சிறீநடராஜ்

திதி:- 19 — 03 — 1993

காற்றாகிப் போனதுவோ ஆண்டுகள் ஐந்து!
காலக்கண்டர் நோக்காவிடினும்;
நேற்றும் நீர் வாழ்ந்ததுபோல் ஓர் நினைவு...

அன்பு மறவாத;
கணவர், பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உறவினர்கள்.

"ராஜ் மகால்",
மானிப்பாய் வீதி,
உரும்பராய்.
(24869)

## 28 ஆம் நாள் நினைவு வழிபாடு



ஜனனம்: 18 — 09 — 1918
மரணம்: 21 — 02 — 1993

### அமரர் B P A. தம்பிநாயகம்

(S. L. A. S.)

21 - 02 - 1993 அன்று லண்டனில் காலமானார். இதனையிட்டு அவருடைய ஆத்மா சாந்திக்காக நாளை (20 - 03 - 1993) சனிக்கிழமை காலை 6 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் இத் திருப்பலியில் உற்றார், உறவினர் அனைவரும் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

40, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.
(24879)

Fr. S. J. இம்மானுவல்,
Mr. S. F. சேவியர்,
(மைத்துனர்)

மகாபொல புலமைப் பரிசில்:

## யாழ். பல்கலைக் கழகத்தில் 27ஆம் திகதி வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 19 யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு 1991 - 92 கல்வி யாண்டுக்கான மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் எதிர் வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக பதிவாளர் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப் (3 ஆம் பக்கம் பார்க்க)

பெரியபுலம் மகா வித்தியாலயம்

## கல்விக் கண்காட்சி

பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் கல்விக் கண்காட்சி கல்வி அலுவலர்கள், அதிபர்கள், ஆலோசகர்கள், பெற்றார்கள் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று (1993 03-20) சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நுழைவு — மாணவர் ரூபா. 5/-
— பெற்றார் ரூபா 10/-

—அதிபர்

(சி/4554)

சாவகச்சேரி நகரசபை

## முக்கிய அறிவித்தல்

### கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாக பிரதேச எல்லைக்குள் உள்ளவர்கள் தங்கள் நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டுமென்பதையும், கட்டாக்காலியாக வீதிகளில், ஒழுங்கைகளில், பொது இடங்களில் திரியும் நாய்கள், இதற்கென சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
18 - 3 - 93,
(சி-4552)

## நன்றி நவிலல்

### சூசைப்பிள்ளை பிரான்சிஸ்

(மரியநாயகம்)

எமது குடும்பத் தலைவர் சூசைப்பிள்ளை பிரான்சிஸ் (மரியநாயகம்) அவர்களுடைய மரணச் சடங்கிலும், திருப்பலிப்பூசையிலும் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பலவகையிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேரி இமெல்டாவும்
(மனைவி)
குடும்பத்தினரும்

139/1, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.
(24886)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 05 — 1916
மறைவு: 30 — 03 — 1992

### அமரர் இரத்தினம் சின்னம்மா

எங்கள் அருமைத் தாயே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, அன்போடும், பண்போடும், பாசத்தோடும் எங்களை வளர்த்தீர்! காலமும் காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்து விட்டாலும், உங்கள் நினைவு என்றென்றும் நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், மக்கள், மருமகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

54/10, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(6060)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஜேர்மன் தூதுவர் வடக்கே வந்தால்..

இலங்கைக்கான ஜேர்மன் நாட்டுத் தூதுவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. குடாநாட்டின் தற்போதைய நிலைமை, மக்களின் கஷ்டங்களைக் கண்டறிவதே ஜேர்மன் தூதுவரின் உத்தேச விஜயத்தின் நோக்கம் என அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின்னர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களை வடக்கே வருவதற்கு அரசாங்கம் அனுமதிப்பதில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் கூறி, வடபகுதி போவதானால் அவர்கள் தமது சொந்தத்தில் ஆபத்தை எதிர்நோக்கியே செல்பவர்களாகக் கருதப்படுவர் என்று பயங்காட்டித் தடுத்து வருகிறது.

இந்த வகையில் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் வடக்கே வருவது கடந்த இரண்டரை வருடங்களாக நின்று போயிற்று. வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து, மக்களின் நிலைப்பாடு குறித்து, அவர்களின் கஷ்டங்கள் குறித்து உண்மையான தள நிலைமை எதுவும் தெரியாதவர்களாகவே உலக நாடுகளின் தூதுவர்கள் கொழும்பில் ''அஞ்ஞாத வாசம்'' செய்கிறார்கள். அரசாங்கம் ஊட்டும் பொய்யான தகவல்களையும், கொழும்புப் பத்திரிகைகள் காட்டும் ஒருபக்கப் பார்வையையும் தேவ வாக்குகளாக நினைத்து அவற்றை அப்படியே சீரணிக்கின்றனர்.

இரு சாரார்களுக்கு இடையில் மோதல் நடந்து கொண்டிருக்கும் போது, அவர்களில் ஒரு சாரார் தமது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வேளை மறுதரப்பினர் சொல்வதையே நம்பி, அதில் குளிர்காய்ந்து கொண்டிருக்கும் வெளிநாட்டுத் தூதுவர்கள் தங்கள் மனிதாபிமானக் கடமையிலிருந்து தவறிவிட்டார்கள்.

தாங்கள் தங்கியுள்ள ஒரு நாட்டின் பிரச்சினைக்குரிய பகுதியின், மக்களில் ஒரு சாரார் பாதிக்கப்பட்டுள்ள பகுதியின் உண்மை நிலையைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு இருக்கவில்லை.

அத்தகைய ஒரு சூழ்நிலையில் ஜேர்மன் நாட்டுத் தூதுவர் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார் என்ற செய்தி மகிழ்ச்சிக்கு உரியதாகும். ஒருபோதும் செய்யாதிருப்பதை விடப் பிந்திச் செய்வது பரவாயில்லை. ஜேர்மன் தூதுவர் திட்டமிட்டபடி வந்து சேர்வாரானால் தமிழ் மக்கள் சார்பில் நன்றி கூறி வரவேற்க வேண்டும். அரசாங்கத்தின் பயங்காட்டுதலுக்கு செவிசாய்க்காமல் யாழ்ப்பாணத்து நிலைமையை நேரில் பார்க்க வருவது பாராட்டத் தக்கதே.

அரசாங்க அதிகாரிகள், அதுவும் படை அதிகாரிகள் ''ஏற்பாடு செய்த பயணத்தில்'' பலாலிக்கு வந்து சென்ற பிரிட்டிஷ் மற்றும் அவுஸ்திரேலியா தூதுவர்களுடன் ஒப்பிடும் போது, ஜேர்மன் தூதுவர் நடுவு நிலைமையும், நிதானமும் உள்ளவர் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஜேர்மன் நாட்டில் பல்லாயிரக் கணக்கான ஈழத்தமிழர்கள் அகதிகளாகப் போய்ச் சேர்ந்துள்ளார்கள். அங்கு புதிதாகத் தோன்றியுள்ள அரசியல் பொருளாதார நிலைமைகளால் ஈழத்தமிழர்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகின்றன. தஞ்சம் கோரிய தமிழர்களை திருப்பி அனுப்பவும் திட்டமிடப்படுகிறது. அதற்கான ஓர் ஆய்வை நடத்துவதும் ஜேர்மன் தூதுவரின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கக் கூடும். பரவாயில்லை கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் வந்து தாம் இங்கு கண்ட உண்மை நிலையை, மக்கள் அவலத்தை உலகத்துக்கு வெளிப்படுத்துவாரானால் அதுவே போதும்.

### பாடசாலைகளில்

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் கடந்த 3 தினங்களாக நடைபெற்று வரும் கல்விக் கண்காட்சி நாளையுடன் முடிவடைகின்றது. (க-51)

o o o

உசன் இராமநாதன் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [க-ரி]

o o o

கொழும்புத்துறை, மார்ச் 19

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறும். (இ-30)

### இன்று

குடாநாட்டில் அமைந்துள்ள இலக்கிய மன்றங்களை ஒன்றிணைத்து தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (க-51)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 19

சாளரம் வெளியீட்டாளர்களும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற மாணவர்களும் இணைந்து நடத்தும் சிறுகதையாக்கல் பற்றிய அறிவூட்டல் நிகழ்வு இன்று வெள்ளி பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் திரு வ. செல்வராசா தலைமையில் நடைபெறும். [ஓ]

### ஆலயங்களில்

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி கோவில் இலட்சார்ச்சனை விழா கடந்த 16ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (க-117)

* * *

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு இசைமணி க. துரைராசா வழங்கும் ''வள்ளி திருமணம்'' கதாப்பிரசங்கம் இடம்பெறும்.

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 19

மல்லாகம் வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும். (அ 89)

o o o

மயிலணி கந்தசாமி கோவிலில் சுக்கிர வாரத் திருவிழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும். பிரஸ்தாப சொற்பொழிவுத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. சிவகரன் உ. அருளானந்தன் நிகழ்த்தும் இச் சொற்பொழிவுகளில் தேவார, திருவாசகக் கதைகள் பிரதான இடம்பெறும். (அ)

### இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யூனியன் கல்லூரி பழைய மாணவர் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

★ மயிலங்காடு ஞானகலா வி. க. அணியை எதிர்த்து காங்கேசன்துறை யங் றோயல் வி. க. அணியும் —

★ இளவாலை யங் ஹென்றீஸியன் அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணியும் மோதவிருக்கின்றன. (உ-20)

---

ஐ. நா. அதிகாரி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையை நேரில் பார்வையிட்டதுடன் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்கள்.

நேற்று மாலை 5 மணியளவில் பூநகரியை வந்தடைந்த அதிகாரிகள் அங்கிருந்து மடு முகாம் போய்ச் சேர்ந்தனர். (அ-3)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்து ஒன்றில் வீரவேங்கை நவமுரளி (திருத்தணிகாசலம் விமலநாதன் - கலுவங்கேணி) என்பவர் வீரமரணமடைந்துவிட்டார். (ஓ 3)

### குண்டு வீச்சில் பெண் காயமுற்றார்

தாளையடி, மார்ச் 19

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறையில் கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் திருமதி ஈ. செல்லத்துரை [வயது 55] என்பவர் படுகாயம் அடைந்தார்.

மூன்று பொம்மர்கள் ஆறு குண்டுகளை இப்பகுதியில் வீசின.

தாக்குதலின் போது நான்கு வீடுகள் சேதம் அடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-144]

### ஸ்ரீலங்கா வென்றது

கொழும்பு, மார்ச் 19

இங்கிலாந்துக்கு எதிராகக் கொழும்பில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஸ்ரீலங்கா அணி 5 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டியது.

ஓட்டவிபரம் :—

★ இங்கிலாந்து:- 380, 228

★ ஸ்ரீலங்கா:- 469, 5 விக்கெட் இழப்புக்கு 146. (உ-6)

### நாளை

பருத்தித்துறை பாவர் ஆசிரியர் சங்கம் நடத்தும் பொருட்காட்சி, ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவி செல்வி கௌரி கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இப்பொருட்காட்சியில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு. சி. முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

o o o

பாஷையூர் ஜேம்ஸ் பொன்ட் குழுவினரின் தயாரிப்பான ''தியாகத்தாய்'' போர்க்கால நாட்டுக் கூத்து நாளை இரவு 7 மணிக்கு பாஷையூர் விளையாட்டு மைதானத்தில் மேடையேற்றப்படும். (த-17)

### மீனவர்கள் ஜெயலலிதாவை சந்தித்தனர்

சென்னை, மார்ச் 19

விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட நாகபட்டினத்தைச் சேர்ந்த 12 இந்தியத் தமிழ் மீனவர்களும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை நேற்று சந்தித்தனர்.

நேற்று முன்தினம் இவர்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இம் மீனவர்களை வவுனியாவில் வைத்துப் பொறுப்பேற்று, கொழும்புக்கு அழைத்துச் சென்று இந்தியத் தூதரகத்திடம் ஒப்படைத்தது. (இ-எ)

---

குடாநாட்டுக்கான ..

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

குத் தேவையான சகல ஆதரவையும் வழங்கி அவர்கள் தலைமையில் யாழ்ப்பாண மக்களுக்கு உதவ அரசாங்கம் தயாராக உள்ளது—என்றார். (அ-6)

---

கடற்படைத் ..

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

விதிகள் — 1992' என்ற தலைப்பில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

இது குறித்து கடந்த 12 ஆம் திகதி தான் அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு அறிவித்தது. இந்த ஒழுங்கு விதிகள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன.

### வெளிமாவட்ட மாணவருக்கு பரிசில்

## இங்கு நடத்த அனுமதி கேட்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

மகாபொல பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வெளி மாவட்ட மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதி வழங்குமாறு யாழ். அரச அதிபர் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சைக் கேட்டிருக்கிறார்.

போக்குவரத்து வசதியின்மை காரணமாக அவர்கள் இங்கிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலை இருப்பதைச் சுட்டிக்காட்டியே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதுவரை காலமும் பொதுவான ஓரிடத்தில் நடத்தப்பட்டு வந்த மேற்படி மகாபொல பரிசளிப்பு நிகழ்ச்சி இம்முறை தொடக்கம்— எதிர்வரும் 27 ஆம் திகதி— நாடு முழுவதிலும் மாவட்டங்கள் தோறும் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

இதற்கிடையில் —

மகாபொல பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் — அமைச்சினால் அதுபற்றி அனுப்பப்பட்ட கடிதங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் — தமது விவரங்களைப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பட்டியலில் பார்வையிடலாம் என்று யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு க. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-5)

### மாகாணசபை தேர்தல் வேட்பு மனு

கொழும்பு, மார்ச் 19

கலைக்கப்பட்ட ஏழு மாகாண சபைகளின் வேட்பு மனுக்கள் மாவட்ட செயலகங்களில் அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து எட்டாம் திகதி நண்பகல் வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று வெளியிட்டார்.

மாகாணசபைத் தேர்தல் மே மாதம் 1ம ஆம் திகதிக்கும் ஜூலை மாதம் 1 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார். (இ-எ)

---

தொண்டர்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

'வாதுவ' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தவர்.

அதே வேளை — ஐக்கிய ராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலர் ஒரிரு தினங்களில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த மாதம் 23 ஆம் திகதி பலாலிக்கு வந்து அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்த போதிலும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதால் கொழும்பு திரும்பியிருந்தது தெரிந்ததே. (இ-3-5)

---

யாழ். பல்கலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின் போது யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும், பதிவாளர் திரு. க. பரமேஸ்வரனும் கூட்டாக இதனை அறிவித்தனர்.

மகாபொலவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், முதல் தவணை காசோலையையும் யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அன்றைய வைபவத்தில் வழங்குவார்.

மேற்படி புலமைப் பரிசில் பெறுவதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ள 241பேரில் 56மாணவர்கள் யாழ் மாவட்டத்துக்கு வெளியே உள்ள ஏனைய பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பவர்களாவர். இவர்களுக்கான புலமைப் பரிசில்களும் இங்கு நடைபெறும் வைபவத்திலேயே வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களில் மேற்படி பரிசில் பெறத்தகுதிபெற்ற 51 மாணவர்கள் தத்தமது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றே பரிசில் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த — மேற்படி பரிசில் பெறத் தகுதி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்ச்சி எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### மாதாந்த உதவிப்பணம்

வண்ணார்பண்ணை, மார்ச் 19

சுன்னாகம் கந்தரோடையில் தற்போது இயங்கிவரும் தெல்லிப்பழை தபால் கந்தோரில் பெப்ரவரி மாதத்திற்கான மாதாந்த உதவிப்பணம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றது. (த-162)

### தொலைக்கல்வி பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி பகுதி I பரீட்சைகள் திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்னர் நடைபெறக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு ஏழு (7) இலக்கங்களை பதிவு இலக்கங்களாகக் கொண்டவர்களும் 42 ஒப்படைகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்தவர்களும் தோற்றலாம் என்று யாழ். மாவட்ட தொலைக்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எம். எஸ். அலெக்சாண்டர் தெரிவித்தார். (த)

### ஈரற்பெரியகுளம் முகாமில்

## சோதனை நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்தன!

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஈரற்பெரியகுளம் தடை முகாமில் கடந்த வாரம் இடம் பெற்ற அசம்பாவித சம்பவம் ஒன்றை அடுத்து அங்கு சோதனை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்ததாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

வடக்கு நோக்கி வரும் லொறிகள் மற்றும் வாகனங்களில் இருந்து இராணுவத்தினரின் சோதனைக்காகப் பொருள்களை இறக்கி ஏற்றும் வேலையில் ஈடுபடும் தொழிலாளர்கள் இருவர் அங்குள்ள இராணுவத்தினரால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தனர் என்றும்—

அதனைத் தொடர்ந்து தமது பாதுகாப்பு உறுதி செய்யப்படாவிட்டால் வேலைகளைத் தொடர முடியாது எனத் தெரிவித்து சுமார் 100 தொழிலாளர்கள் மறுப்புத் தெரிவித்ததை அடுத்தே அங்குவாகனங்களை சோதனையிடும நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்திருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் சோதனைக்காக தடுத்து வைக்கப்பட்டுத் தரித்து நின்ற லொறி ஒன்றில் இருந்து பெறுமதி மிக்க சில பொருள்கள் களவாடப்பட்டசம்பவம் தொடர்பாகவே அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனராம்.

படுகாயமடைந்த இரண்டு தொழிலாளர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (த-5)

### பங்கீட்டு நிவாரண அட்டை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ''அ'', ''உ'' பங்கீட்டு நிவாரண அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட புதிய பங்கீட்டு அட்டைகள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன.

பங்கீட்டு அட்டைகளை வைத்திருப்பவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வழங்கும்
விளையாட்டு மைதான விரிவாக்கம்
“ 3 ஆம் கட்டம் ”
நிதிசேகரிப்புக்கான
நாடக முத்துக்கள் மூன்று

இடம் : கைலாசபதி கலையரங்கு (யாழ். பல்கலைக் கழகம்)
காலம் : 21 - 03 - 93 ஞாயிறு
காலை 9.30 மணி
மாலை 3.00 மணி

இரண்டு காட்சிகள்

1) குழந்தை சண்முகலிங்கம் நெறியாள்கையில் பல்கலைக் கழக ஊழியர்கள் வழங்கும்
“ உறவுகள் ”
(சமூக நாடகம்)

2) கரேஸ் கனகராஜா (யாழ். பல்கலைக்கழக ஆங்கில துறைத் தலைவர்) நெறியாள்கையில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும்
“ CHILD'S PLAY ”

3) யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் வழங்கும் அழகு சுப்பிரமணியத்தின்
“WAKE UP MY BELOVED”

அனுமதி சீட்டுக்கள் மண்டப வாயிலில் விற்பனையாகும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
[S/4557]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மிகப்பெரிய கிரிக்கெட் மோதல்

## இன்றும், நாளையும் விறுவிறுப்பான ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

சென்றல்—சென் ஜோன்ஸ் அணிகளுக்கிடையிலான 89 ஆவது வருடாந்த வடக்கின் மிகப்பெரிய கிரிக்கெட் மோதல் இன்றும், நாளையும் சென்றல் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

மிகப்பெரிய கிரிக்கெட் மோதலைக் கண்டுகளிப்பதற்காக பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் மத்திய கல்லூரி மைதானத்தில் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆட்டத்தை ஒட்டி இவ்வார ஆரம்பம் முதலேயே யாழ். நகரம் களைகட்டியதைக் காணமுடிந்தது.

ஆட்டம் இன்றும், நாளையும் காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகும். நண்பகல் 12 30 முதல் 1 10 வரை மதிய உணவு இடைவேளையாகும்.

மீண்டும் பிற்பகல் 3-10 வரை நடைபெறும் ஆட்டம் 3-30 வரை தேநீருக்காக நிறுத்தப்படும். பின்னர் மாலை 5-40 மணி வரை ஆட்டம் தொடரும்.

இன்றைய ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கப் பிரதிநிதிகள் இருவர் கடமையாற்றுவார்கள் அவர்களுடன் திரு எம். நடராஜசுந்தரம், திரு வி. கே சண்முகலிங்கம், ஆர். எஸ் பீற்றர் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றுவர்

### மத்திய கல்லூரி அணி

மத்திய கல்லூரி அணியில் இடம் பெறுவோர் விவரம் வருமாறு:

இருப்பவர்கள் இடமிருந்து வலம்; திரு வி ஜயரத்துரை (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), எஸ் ஆகாஷ் (அணித் தலைவர்), திரு. என் கே. சண்முகநாதபிள்ளை (அதிபர்), எஸ். மணிவதனன் [உப தலைவர்], திரு. ரி நாகரட்ணம் [பொறுப்பாசிரியர்].

நிற்பவர்கள் [நடுவரிசை] இடமிருந்து வலம்: ஜி விஜேந்திரகுமார், எஸ் சதீஷ், ரி. சதீஷ்குமார். எஸ் ரவிசங்கர், எஸ் சதீஷ்குமார், கே சுரேஷ். கே. கஜேந்திரகுமார்.

நிற்பவர்கள் [பின் வரிசை] இடமிருந்து வலம்: ஆர். லஷ்மிகரன், பி ரமேஷன், கே. றொபேர்ட் எஸ். ராஜ்குமார். கே. பிரகாஷ். எஸ். கமல்ராஜ் எம் குமரேசன்.

### சென் ஜோன்ஸ் அணி


சென். ஜோன்ஸ் அணியில் இடம் பெறுவோர் விவரம் வருமாறு

இருப்பவர்கள் இடமிருந்து வலம்: திரு. ஜே. அமலசீலன் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), எம். காண்டீபன், ரி. பீஷ்மன் (அணித் தலைவர்). திரு. எஸ். தனபாலன் (அதிபர்), எம். துஷாரா (உதவித் தலைவர்). திரு. எவி சூரியகுமார் (பயிற்சியாளர்) திரு. எம். பி புருடி [விளையாட்டுப் பொறுப்பாசிரியர்].

நிற்பவர்கள் [நடு வரிசை] இடமிருந்து வலம்: கே. எக்ஸ். மதியழகன், பி. சங்கர், ரி. சிவரூபன், எஸ். தயாநேசன், ரி. அரவிந்தன், வி. எஸ். நிர்மலானந்தன், பி. சஞ்சீவ், என் சுஜிதகுமார்.

நிற்பவர்கள் (பின் வரிசை) இடமிருந்து வலம்; ஜே. ஜி. பிரதீபன், கே. பிரதீபன், ஜி. ஸ்ரீதரன், ஆர். இராஜகுலசிங்கம்.

[உ-20]



சென்றல் கிரிக்கெட் அணி



சென். ஜோன்ஸ் கிரிக்கெட் அணி

---

திருநெல்வேலி
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1993

காலம்: 1993-03-21 ஞாயிறு காலை 9-00 மணி
இடம்: பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலாநிதி அ. நவரத்தினராசா,
தலைவர்.

திரு. க. சிவானந்தமூர்த்தி,
கௌரவ செயலாளர்.

கலாநிதி ந. நடேசன்,
பொருளாளர்.

(சி-4691)

---

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி நடராசா

அளவெட்டி வடக்கு, வேளாவையைச் சேர்ந்த இளையதம்பி-நடராசா 16-08-93ல் அலுக்கை, அளவெட்டியில் காலமானார்,

அன்னாரது ஈமக்கிரியைகள் அன்றையதினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்: நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
மனைவி, மகள், மருமகன்.

அலுக்கை,
அளவெட்டி.

(24877)

### கந்தையா நாகேந்திரன்

சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நாகேந்திரன் 18-03 93 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா—கமலேஸ்வரி அவர்களின் சிரேஸ்ட புத்திரனும், வடிவாம்பிகையின் அன்புக் கணவரும், குமாரசாமி-மாநதப்புரவல்லியின் மருமகனும், கிரிதரன், குலேந்திரன், ராஜினி, மஞ்சுளா, லோஜினி, யசோதரா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராகேந்திரன், சுசிலாதேவி (மலேசியா), சறோஜினிதேவி (சுவிஸ்), பத்மாதேவி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவ்வறித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
நா. கிரிதரன்
(மகன்)

(6063)

### திருமதி சின்னத்தம்பி இராசம்மா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாக கொண்டவரும் தம்பிராய் பூநகரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற வைரமுத்து சின்னத்தம்பியின் அன்பு மனைவி இராசம்மா 18-03-1993 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் சரஸ்வதி ஓய்வுபெற்ற ஆசிரியை), இரத்தினம். பாக்கியம், கந்தசாமி கிராமசேவை அதிகாரி-சண்டிலிப்பாய்), காலஞ்சென்ற நடராசா, வீரபாகு, காலஞ்சென்ற சிவஞானம் மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலசிங்கம் கொழும்புத்துறை), காலஞ்சென்ற பழநித்துரை திருநெல்வேலி, காலஞ்சென்ற நடராசா (கன்னதிட்டி), வள்ளியம்மை (ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), சரஸ்வதி (வயாவிளான், நாகேஸ்வரி (பூநகரி), பஞ்சராசா (புலையிரதப்பகுதி ஏழாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் முருகமூர்த்தி வீதி சங்கானையிலுள்ள கந்தசாமி (மகன்) அவர்களின் இல்லத்தில் இன்று (19-03-93) வெள்ளிக்கிழமை மு. ப. 11. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை முக்கையாறு மயானத்திற்கு (கரைச்சி) எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
சி. கந்தசாமி
(மகன்)

சங்கானை
(24885)

### சதாசிவம் யோகேஸ்வரன்

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சதாசிவம் யோகேஸ்வரன் 17-03-93 இல் சுவீடனில் அகால மரணமானார். இவர் காலம் சென்ற சதாசிவம் செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும், பஞ்சாட்சரதேவி (கலா - அமெரிக்கா), ஜெயந்தினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி. தில்லைவனம் துரையப்பா.
[மாமி]

'நாதன்ஸ்'
3 ம் கட்டை,
பருத்தித்துறை வீதி.
கல்வியங்காடு.

(24883)

---

## மத்தியின் மைந்தனே நீ! மகிழ்ந்து வாழி!

மகரயாழ் விருது பெற்று
மாண்புறு பெருமை பெற்ற
சிவகுமார் எந்தலே நீ
சிறப்புற வாழி வாழி!

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

(C/4555)

---

## அறிவித்தல்

கடந்த திங்கட்கிழமை (15-3-93) உதயனில் பிரசுரமான காசிப்பிள்ளை விநாயகமூர்த்தியின் மரண அறிவித்தல் விளம்பரத்தில் தரப்பட்ட தகவல்கள் முற்றிலும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன். மறுநாள் செவ்வாய்க்கிழமை (16-3-93) உதயனில் திரு. பொன். பூலோகசிங்கம் என்பவரால் வெளியிடப்பட்ட விளம்பரத்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய தப்பான அபிப்பிராயங்களை நீக்கிக் கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

க. சண்முகரத்தினம்

[illegible]
சுன்னாகம்.

(சி-4553)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.